**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.03.2020

Accepted: 20.06.2020

Published: 01.07.2020

Citation:
Sulochana, N. (2020). Telugu Kinship Terms. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 84–89.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3410

*Corresponding Author:
suloraja64@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Telugu Kinship Terms

**Dr. N. Sulochana**
*Assistant Professor, Faculty of Tamil Languages & Linguistics*
*International Institute of Tamil Studies, Taramani, Chennai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-5196-7666

**Abstract** - Kinship is a fundamental feature, the most universal and basic of all human relationships, and it is based on the ties of blood, marriage, or adoption. Kinship terminologies consist of the terms used to refer to culturally recognized kinship relations between people. Research in the anthropology field has shown that kin terminologies have a complex combinatorial structure, and it varies systematically across all the cultures and traditions. The study examines the kinship terms in the Telugu language spoken in the southern part of Tamil Nadu. The main intention of the article is to bring up the importance of having a dictionary for regional kinship terms. The study focuses on the comparison between Telugu and Tamil kinship terms. It attempts to explore the pronunciation of how it varies from Tamil and Telugu languages.

**Key Words:** Linguistics, Tamil Grammer, Telugu Grammer, Ethnography, Kinship, Terminologies, Dictionary, Languages, Comparison.

**References**

1. Ki.Ra. Karisal Vattara Kalaichsol Agarathi, Annam Publication
2. Aruli, P, Ivai Tamil Alla Ennum Ayarsol Agarathi, Volume 1-3
3. Kothandaraman, R, Thamizhenappaduvathu, International Institute of Tamil Studies, Chennai
4. Chithiraputhiran, Kinship Terms of Sangath Thamizh, International Institute of Tamil Studies, Chennai.
5. Meenakshisundaran, T.P, The Kinship Terms, Indian Linguistics.
6. Thayammal Aravanan, A Study of Kinship Terms, Paari Nilayam, Chennai
7. Thamas R.Trautmann, Dravidian Kinship.

# தெலுங்கு உறவுமுறைச் சொற்கள்

*முனைவர் நா. சுலோசனா*
உதவிப் பேராசிரியர், தமிழ்மொழி (ம) மொழியியல் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

**ஆய்வுச்சுருக்கம்**: *பயன்பாட்டு அடிப்படையில் நோக்கும்போது உறவுமுறையைக் குறிப்பிடவும், விளிக்கப்பயன்படுத்தவும் என இரண்டு வகையில் சொற்கள் பயன்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. உறவுமுறைச் சொற்கள் பொதுவாக விளிப்பெயர்களாகவே விளங்குகின்றன. அம்மை, அப்பன், மாமன், அக்கன், தாத்தன், ஐயன் ஆகிய சொற்கள் தாய், தந்தை, அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, அண்ணன், தம்பி போன்றவை உறவுமுறையைக் குறிக்கும் தனித்துவமான சொற்களாகும். சில உறவுமுறைச் சொற்கள் உறவுமுறை சாராத முன்னொட்டு க்களையோ, பின்னொட்டுக்களையோ சேர்ப்பதன் மூலமும் பெறப்படுகிறது.*

*பல்வேறு நாட்டினரின் படையெடுப்புகளினாலும் பல்வேறு மொழிபேசும் மக்கள் தமிழ்நாட்டில் குடியேறியதாலும் பல்வேறு மொழிகள் தமிழ்மொழியில் கலக்க நேரிட்டன. அப்படித்தான் திராவிட மொழிக் குடும்பத்தில் ஒன்றான தெலுங்கு மொழியும் ஆகும். மனித சமுதாயத்தில் இவ்உறவுமுறைத் தொடர்புகளின் தன்மை ஓரேமாதிரியாக இருப்பதில்லை. வெவ்வேறு சமுதாயங்களின் உறவுமுறைத் தொடர்புகள் வேறுபாடுகின்றன. அவற்றைப் புரிந்துகொள்வதற்கு உறவுமுறைச் சொற்கள் பெரிதும் உதவியாய் இருக்கின்றன. உறவுமுறைகளைக் குறிப்பிடப்பயன்படும் சொற்கள் எல்லா மொழிகளிலும் இருக்கின்றன. என்றாலும் அவை மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. சமுதாயத்துக்குச் சமுதாயம் மாறுபடுவதைக் காணமுடிகிறது. தமிழ்நாட்டின் தென்பகுதிகளில் பேசும் தெலுங்கு மொழிகளிலுள்ள உறவுமுறைச் சொற்களை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:** தமிழ் இலக்கணம், தெலுங்கு இலக்கணம், வட்டார வழக்கு, உறவுச் சொற்கள், அகராதிகள், மொழியியல்*

மனிதன் ஒரு சமூக விலங்கு. சமூகச் சங்கிலிபோல் மனித உறவுகள் பின்னிக் கிடக்கின்றன. தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம், தலைமுறை தலைமுறை என பரந்துவிரிந்த கிளைகளாக மனித உறவுகள் திகழ்கின்றன. இவ்உறவு முறைகளான ரத்த உறவுகளைக் குறிக்கும் சொற்களே உறவுமுறைச் சொற்கள் எனப்படுகின்றன. பெற்றோர்பிள்ளைகளுக்குமான தொடர்பு, உடன் பிறந்தோருக்குமான தொடர்பு என உறவுமுறைத் தொடர்புகள் மனிதர்களிடையே காணப்படுகின்றன.

உறவுமுறைத் தொடர்புகளின் தன்மை மனித சமுதாயத்தில் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வெவ்வேறு சமுதாயங்களின் உறவுமுறைத் தொடர்புகள் வேறுபாடுகின்றன. அவற்றைப் புரிந்துகொள்வதற்கு உறவுமுறைச் சொற்கள் பெரிதும் உதவியாய் இருக்கின்றன. உறவுமுறைகளைக் குறிப்பிடப் பயன்படும் சொற்கள் எல்லா மொழிகளிலும் இருக்கின்றன. என்றாலும் அவை மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. சமுதாயத்துக்குச் சமுதாயம் மாறுபடுவதைக் காணமுடிகிறது. தமிழ்நாட்டின் தென்பகுதிகளில் பேசும் தெலுங்கு மொழிகளிலுள்ள உறவுமுறைச் சொற்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

பயன்பாட்டு அடிப்படையில் நோக்கும்போது உறவுமுறையைக் குறிப்பிடவும், விளிக்கப்

பயன்படுத்தவும் என இரண்டு வகையில் சொற்கள் பயன்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. உறவுமுறைச் சொற்கள் பொதுவாக விளிப்பெயர்களாகவே விளங்குகின்றன. அம்மை, அப்பன், மாமன், அக்கன், தாத்தன், ஐயன் ஆகிய சொற்கள் தாய், தந்தை, அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, அண்ணன், தம்பி போன்றவை உறவுமுறையைக் குறிக்கும் தனித்துவமான சொற்களாகும். தம் + அப்பன் = தமப்பன் என்ற சொல் தகப்பன் என்று புழக்கத்தில் உள்ளதைப் பார்க்கமுடிகிறது. தம் + அக்கை = தமக்கை, தம் + ஐயன் = தமையன், தம் பின் என்ற சொல்லே தம்பி என மருவியிருப்பதையும் நோக்கமுடிகிறது. தாய், தந்தை என இப்பொழுது வழங்கிவரும் சொற்களின் மூல வடிவம் ஆய், அந்தை ஆகும். ஆய் என்பதே மூலச்சொல்லாகும். இது குறித்து சங்க இலக்கியங்களிலும் பதிவு காணப்படுகிறது. ஆயின் ஆய் "பாட்டி" ஆகிறது. இதுவே இன்றைய வழக்கில் ஆயா எனப்படுகிறது. ஆனால் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட பாட்டி எனும் சொல் அன்று பன்றியைக் குறிப்பிட்டது. மலையாளத்தில் பட்டி என்பது நாயைக் குறிப்பிடுகிறது. இன்றைய வழக்கில் பாட்டி என்பது முதியவர்களைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. இச்சொற்களை ஆய்வுக்குட்படுத்த வேண்டும். என்தாய் (யாய்), உன்தாய் (ஞாய்) எனவும் சங்க இலக்கியக் குறுந்தொகையில் (எந்தையும் நுந்தையும், யாயும் ஞாயும்) பார்க்கமுடிகிறது. சில உறவுமுறைச் சொற்கள் உறவுமுறை சாராத முன்னொட்டுக்களையோ, பின்னொட்டுக்களையோ சேர்ப்பதன் மூலமும் பெறப்படுகிறது.

தலைமுறை வேறுபாட்டைச் சுட்டவும் உறவுச் சொற்கள் பயன்படுகின்றன. தனியொரு வகை உறவினரை மட்டுமே குறிக்கும் சொற்கள் (Denotative terms) எனவும் குறிப்பிடப்படுகின்றன. தாய், தந்தை, கணவன், மனைவி போன்றவை குறித்துக் காட்டும் சொற்கள் எனவும், தாய்மாமன் மகன், தந்தையின் சகோதரியுடைய மகள், மனைவியுடைய சகோதரன் இவ்உறவுமுறைகள் வகைப்பாட்டுச் சொற்களுக்குள் அடங்குவனவாகும்.

பல்வேறு நாட்டினரின் படையெடுப்புகளினால் பல்வேறு மொழிபேசும் மக்கள் தமிழ்நாட்டில் குடியேறியதால் பல்வேறு மொழிகள் தமிழ்மொழியில் கலக்க நேரிட்டன. அப்படித்தான் திராவிட மொழிக் குடும்பத்தில் ஒன்றான தெலுங்கு மொழியும் ஆகும்.

தமிழ்மொழி மக்களிடையே வட்டாரத்துக்கு வட்டாரம் மொழி வேறுபாட்டைக் காணமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் பேசும் மொழிக்கும் வேறு பகுதியில் வசிக்கும் மக்கள் பேசும் மொழிக்குமே வேறுபாடு காணப்படுகிறது. இதைத்தான் வட்டார வழக்கு என்கிறோம். வட்டார வழக்குச் சொற்களின் பொருளைப் புரிந்துகொள்ள வட்டார வழக்கு அகராதி தேவைப்படுகிறது. இது தமிழ் மொழியின் செழுமையைக் காட்டுகிறது.

கரிசல் வட்டாரச் சொல்லகராதி (கி.ரா) கொங்கு வட்டாரச் சொல்லகராதி (பெருமாள் முருகன்) நடுநாட்டு சொல்லகராதி கண்மணி குணசேகரன்), குமரி வட்டார வழக்குச் சொல்லகராதி, நெல்லை வட்டாரச் சொல்லகராதி (வெள் உவன்), அ.கா. பெருமாள்) நாஞ்சில் வட்டாரச் சொல்லகராதி, சென்னை வட்டாரச் சொல்லகராதி என ஒவ்வொரு பகுதிக்கும் வட்டார வழக்குச் சொல்லகராதி இருப்பதுபோல ஒவ்வொரு சமூகத்திற்கும் வழக்குச்சொல் அகராதி தேவைப்படுகின்றது. மீனவர் வழக்குச் சொல்லகராதி, பிராமணர் வழக்கு, போன்ற சமூக வழக்குச்சொல் அகராதிகளும் தேவைப்படுகின்றன. அந்த அடிப்படையில் தெலுங்கு பேசும் மக்களிடையே உள்ள உறவுமுறைச் சொற்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறது. உதாரணத்திற்கு

தெலுங்கில் "பண்டு" எனும் பெயர்ச்சொல் பழத்தைக் குறிக்கிறது. பண்டு என்னும் பழஞ்சொல்லிற்கு முந்தைய, பழைமை என்று பொருள். பிந்தியது "பிஞ்சு". ஆதாவது தெலுங்கில் பிஞ்சு என்பதை "பிந்த" என்றும், மலையாளத்தில் "பிந்து" என்றும் வழங்கப்படுகிறது. இது போன்று சொற்களை ஆராய இக்கட்டுரை இடம் அளிக்கிறது. ஒரு சொல்லானது வட்டாரத்திற்கு வட்டாரம், சமூகத்திற்குச் சமூகம் மாறுபடுகிறது. பொருள் ஒன்றாக இருப்பினும் சொல் மாற்றம் அடைகிறது. இக்கட்டுரை ஒரு சமூகம் சார்ந்து ஒரு பகுதி சார்ந்துதான் ஆராய்படுகிறது.

தாய், தந்தை என்னும் சொற்கள் குறிக்கப் பயன்படுத்தும் சொற்களாகின்றன. ஆனால் பயன்பாட்டில் அம்மா, அப்பா என்றுதான் இருக்கின்றன. ஆகவே இவை விளிக்கப் பயன்படும் சொற்களாகின்றன. தெலுங்கிலுள்ள ஒருசொல் தமிழிலும் ஆங்கிலத்திலும் எப்படி ஒலிக்கப்படுகின்றது என்பதுக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

| தெலுங்கு | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| அம்ம,<br>தல்லி,<br>தல்லி ரேனே பிட | அம்மா<br>(அம்மா இல்லாத பிள்ளை)<br>(ஆய், அன்னை, தாய், யாய் பழந்தமிழ்ச் சொற்கள்) | Mother<br>A child without a mother |
| அய்ய, நைனா, தன்றி | அப்பா (ஞாய், அத்தன், தந்தை பழந்தமிழ்ச் சொற்கள்) | Father |
| அண்ண | அண்ணன் | Brother |
| பெத்த அண்ண | மூத்த அண்ணன் | Elder brother |
| சின்ன அண்ண | இளைய அண்ணன் | Younger brother |
| அக்க | அக்கா (தவ்வை என்பது பழஞ்சொல்) | Sister |
| பெத்த அக்க | மூத்த அக்கா (பெரிய) | elder sister |
| சின்ன அக்க | இளைய அக்கா(சிறிய) | younger sister |
| பசிபிட | குழந்தை | Baby |
| கூத்துரு | மகள் | Daughter |
| கொடுகு | மகன் | Son |
| அவ்வ, நானம்மா<br>(அவ்வை என்றால் பாட்டி என்று பொருள். அவ்வை என்பதிலிருந்து அவ்வ வந்திருக்கிறது) | பாட்டி<br>(தொல்காப்பியர் காலத்தில் பாட்டி என்பது பன்றி, நாய் இவற்றின் பெண்பாலைக் குறித்தது. மலையாளத்தில் பட்டி என்பது நாயைக் குறிக்கிறது. இன்றைய வழக்கில் பாட்டி என்னும் சொல் வயதில் முதியவர்களைக் குறிப்பிடுகிறது) | grand mother |
| பெத்தம | அம்மாவினுடைய அம்மா<br>அப்பாவினுடைய அம்மா | mother's mother<br>father's mother |
| ஒதன, ஒதின | அண்ணி, மதினி | Sister-in-law (brother's wife & husband's sister)<br>No proper term in English. It can be stated that father's sister's daughter |

| | | |
|---|---|---|
| மனவராலு | பெயர்த்தி, பேத்தி | grand daughter |
| மனவண்டு | பெயரன், பேரன் | grand son |
| மூண்டு , மொகாண்டு, இன்ட்டிலாயன | கணவன் | Husband (spouse) |
| பாவ | மச்சான் | Brother-in-law (husband's elder brother) |
| மருதி | கொழுந்தன் | Brother-in-law (husband's younger brother) |
| ஆண்டபிட | நாத்தனார் | Sister-in-law (husband's Elder/younger sister) |
| தோடிகோடலு | ஓரகத்தி | husband's brother's wife |
| பெள்ளி | திருமணம் | Marriage |
| கோடலு (கோடல் என்றால் பெற்றுக்கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல் என்று பொருள். கோடல் என்பதிலிருந்து கோடலு வந்திருக்கிறது. தெலுங்கில் "ல்" உச்சரிப்பு "லு" ஆகிறது. கண்- கன்னு, பல்-பல்லு, புல்- புல்லு) | மருமகள் | daughter-in-law |
| அல்லுண்டு | மருமகன் | son-in-law |
| மொகபிட | ஆண் குழந்தை | baby boy |
| ஆணபிட | பெண் குழந்தை | baby girl |
| சுட்டாலு | உறவினர், சுற்றம் | cousin |
| பெல்லம், இன்ட்டிலாவ | மனைவி | Wife (spouse) |
| மருதாளு | மச்சினிச்சி, கொழுந்தியா, மச்சினி, மைத்துனி | Maternal uncle's daughter, paternal aunty's daughter (wife's sister, brother's wife) |

இறுதியில் "லு" உச்சரிப்பில் முடியும் சொற்கள் பன்மையைக் குறிப்பதாகும். திராவிட மொழிகளில் தெலுங்கு ஆந்திரத்தில் முழுமையாகப் பேசப்படுகிறது. தமிழ் நாட்டில் புலம்பெயர்ந்து வந்த மக்களாலும் இடப்பெயர்வினாலும் தெலுங்கு பலவாறாகப் பேசப்படுகிறது. இருப்பினும் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பேசும் தெலுங்கிற்கும் ஆந்திரத்தில் பேசும் தெலுங்கிற்கும் ஒலிப்பில் கொஞ்சம் வேறுபாடு காணப்பட்டாலும் பொருளைப் புரிந்துகொள்ள முடியும். அந்த வகையில் தெலுங்கு மொழியிலுள்ள உறவு முறைச் சொற்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

"செல்லி" என்னும் சொல் உடன் பிறந்த தங்கைகளைக் குறிப்பிட்டாலும் பொதுவாகவும் மரியாதை நிமித்தமாகவும் அக்க, செல்லி என அழைப்பதுண்டு. அதைப்போல தம்பி என்பதும் பொதுச்சொல்லாக விளிக்கப் பயன்படுகிறது. உடன்பிறந்த தம்பியை "தமுண்டு", "அப்பண்டு" என்று அழைப்பது போல் அறிமுகமில்லாதவர்களை விளிக்கவும் இச்சொற்கள் வழக்கத்திலுள்ளன. பசிபிட என்பது பச்சப்புள்ள, பிறந்த குழந்தை என்பதற்கு மாற்றான தெலுங்குச் சொல்லாகும். உறவுமுறைச் சொற்களைப் போன்று புழங்கு பொருள்கள், திசைச்சொற்கள், நாள்கள், எண்கள், தானியங்கள், பழங்கள், மரங்கள், காய்கறிகள், விலங்குகள்

எனத் தங்களின் வாழ்வியலோடு தொடர்புடைய சொற்களையும் பதிவு செய்வது என்பது முக்கியமானதாகும்.

### ஆய்வுக்குத் துணை செய்த தகவலாளிகள்

1. கி.ரா.கரிசல் வட்டாரச் சொல்லகராதி, அன்னம் வெளியீடு
2. ப.அருளி, இவை தமிழ் அல்ல என்னும் அயர்சொல் அகராதி, தொகுதி 1-3
3. இரா.கோதண்டராமன், தமிழெனப்படுவது, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. டாக்டர் சித்திரபுத்திரன், சங்கத் தமிழின் உறவு விதிமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. டி.பி.மீனாக்ஷிசுந்தரன், தி கின்ஷிப் விதிமுறைகள், இந்திய மொழியியல்.
6. டாக்டர் தையம்மல் அரவாணன், உறவின்மை விதிமுறைகளின் ஆய்வு, பாரி நிலையம், சென்னை.
7. தாமஸ் ஆர். ட்ராட்மேன், திராவிட உறவு.